பெயர்: .............................                                        தேதி: .............................

# அடைப்புக்குறிக்குள் உள்ள வார்த்தையை சரியான வேற்றுமை உருபுடன் இணைத்து எழுது.

**சான்று:-** உனக்குப் பிடித்த (வடிவங்கள்) ________ எழுது.

உனக்குப் பிடித்த **வடிவங்களை** எழுது.

1. நான் (கடை) ________ ச் சென்றேன்.

2. பொம்மைகளில் (கால்கள்) ________ மாற்றாக சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

3. சுத்தமான (ஆடை) ________ அணிய வேண்டும்.

4. பள்ளியில் நடக்கும் நிகழ்வுகளில் (உன்) ________ ப் பிடித்தவற்றுள் கலந்து கொள்.

5. கோழி (குப்பை) ________ க் கிளறிக் கொண்டு இருந்தது.

6. வண்ணத்துப்பூச்சி பூவிலுள்ள (தேன்) ________ உணவாக உண்ணும்.

7. கிருஷ்ணகிரி (மலை) ________ அருகில் பழங்காலச் சமணப்படுகைகள் உள்ளன.

8. (உடல்) ________ உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவர்.

9. (உறவினர்) ________ பார்க்கச் சென்றேன்.

10. (மூக்கு) ________ நுகரக்கூடியவற்றை எழுது.

11. ஆசிரியர் தேக்கு, சந்தனமரம், பூவரசு முதலிய (மரம்) ________ காட்டினார்.

12. ரோஜா மலர்கள் (கண்கள்) ________ விருந்தாக அமைந்தன.